மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே கீழக்கரை பகுதியில் நடைபெற்று வரும் பிரம்மாண்ட ஜல்லிக்கட்டு விளையாட்டு மைதானத்தின் கட்டுமானப் பணிகளை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்த போது எடுத்தபடம். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல் மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.

சமூக நீதியை அரியணை ஏற்றி - அண்ணா, கலைஞர் வழியில் எங்கள் தலைவர் பணியைத் தொடர்கிறார்!

'பராசக்தி' தொடங்கி 'மாமன்னன்' வரை கலைவடிவங்களிலும் நாங்கள் சமூகநீதியை தொடர்ந்து உயர்த்திப் பிடித்து வருகிறோம்!

பா.இரஞ்சித்தின் பதிவுக்கு நன்றி தெரிவித்து - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வலை தளப் பதிவு!

சென்னை, ஜூலை 5 – 'மாமன்னன்' திரைப் படத்தினை வரவேற்று இயக்குநர் பா.இரஞ்சித் வெளியிட்டிருந்த பதிவையொட்டி, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், "அண்ணா, கலைஞர் வழியில் எங்கள் கழகத் தலைவர் அவர்களும் சமூக நீதியை அரியணையில் ஏற்றி, அப்பணியைத் தொடர்கிறார்!" என்றும், 'பராசக்தி'யில் தொடங்கி 'மாமன்னன்' வரை கலை வடிவங்களிலும் சமூக நீதியை நாங்கள் தொடர்ந்து உயர்த்திப் பிடித்து வருகிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு: –

மாமன்னன்' திரைப்படத்தைப் பாராட்டிய இயக்குநர் சகோதரர் பா. இரஞ்சித் அவர்களுக்கு நன்றி. சாதிய அடக்குமுறைகளும் ஏற்றத்தாழ்வும் கழகம் மட்டுமல்ல, எந்த கட்சிக்குள் இருந்தாலும் அது அறவே ஒழிக்கப்பட வேண்டும்.

அனைவருக்குமான சுயமரியாதையை உறுதி செய்ய, தொடர் பரப்புரை செய்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது கழகம்.

ஆட்சிப் பொறுப்பேற்கும்போதெல்லாம் சட்டங்களாகவும் திட்டங்களாகவும் `சமூகநீதி'யை அரியணை ஏற்றி, அரசியல் தளத்தில் தொடர்ந்து போராடி வருகிறது கழக அரசு. அண்ணா, கலைஞர் வழியில் எங்கள் கழகத் தலைவர் அவர்களும் இப்பணியைத் தொடர்கிறார்.

`பராசக்தி'யில் தொடங்கி `மாமன்னன்' வரை கலைவடிவங்களிலும் `சமூகநீதி'யைத் தொடர்ந்து உயர்த்திப் பிடித்து வருகிறோம்.

ஆயிரமாயிரம் ஆண்டு கால சனாதனத்திற்கு எதிராக, சமத்துவம் காண போராடும் நூறாண்டு கால போராட்டம் இது. இன்னும் முழுமை பெறாத போராட்டமும் கூட.

ஒரே திரைப்படத்தின் மூலம் சமூகத்தில் தலைகீழ் மாற்றத்தை நிகழ்த்திவிட முடியாது என்பதையும் நாம் அனைவரும் அறிவோம். பெரியார், அம்பேத்கர் வழியில் மக்களுடன் தொடர்ந்து உரையாடி இம்மாற்றத்தை நிகழ்த்த முடியும். அதைநோக்கி நாம் அனைவரும் ஒன்றிணைந்து பயணிப்போம். இப்பயணத்தில் கழகம் மீதும் என் மீதும் இப்போது நம்பிக்கை கொண்டிருக்கும் சகோதரர் இரஞ்சித் அவர்களுக்கு நன்றி.

இவ்வாறு அப்பதிவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் சில மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட கனமழை எச்சரிக்கை!

மின்துறை எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விரிவான ஆய்வு!

மின்சாரம் - நிதி - மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு - காணொலி வாயிலாக நடத்தினார்!

சென்னை, ஜூலை 5 - நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தமிழ்நாட்டின் சில மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள கனமழை எச்சரிக்கை குறித்து மின்துறை சார்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விரிவான ஆய்வினை காணொலிக் காட்சி மூலமாக நடத்தினார்.

அதன் விபரம் வருமாறு:

தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் நிதி, மின்சாரம், மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ்நாட்டில் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள கோயம்புத்தூர், நீலகிரி, திருப்பூர், தேனி, மற்றும் திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களிலும் மற்றும் தமிழ்நாட்டின் இதர பிற மாவட்டங்களிலும் மின்துறை சார்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களிடையே விரிவான ஆய்வினை காணொலிக் காட்சி மூலமாக மேற்கொண்டார்.

அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களும் தகுந்த முன்னெச்சரிக்கையுடன் செயல்படுமாறும், தேவையான JCB வாகனங்கள், தளவாட பொருட்கள் மற்றும் உபகரணங்களை முன்கூட்டியே தயார் நிலையில் வைத்துக் கொள்ளுமாறும், பணியாளர்களுக்குத் தேவையான அனைத்து பாதுகாப்பு உபகரணங்களையும் அளித்து பாதுகாப்பான முறையில் மின்கட்டமைப்பைச் சீர்செய்யும் பணியில் ஈடுபடுமாறும், தேவைப்படின் அருகாமையில் உள்ள மின்பகிர்மான வட்டங்களிலிருந்து பணியாட்களை பணியில் ஈடுபடுத்துமாறும், அனைத்து வாரிய வாகனங்களையும் தயார் நிலையில் வைத்துக்கொள்ளுமாறும் அமைச்சர் அனைத்து அலுவலர்களுக்கும் உத்தரவிட்டார்.

சீரமைப்புப் பணிகளில் ஈடுபடும் அனைத்து அலுவலர்களும் பணியாளர்களும் மிகுந்த கவனத்துடனும், உரிய பாதுகாப்புடனும் செயல்படுமாறு மின்துறை அமைச்சர் அறிவுறுத்தினார்.

மேலும், இத்தகைய இயற்கை இடர்ப்பாடுகளின் போது மாவட்ட நிர்வாகத்தினருடன் எப்போதும் தொடர்பில் இருக்குமாறு அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

மின் இணைப்பு துண்டிக்கப்பட்டால் முன்னுரிமை அடிப்படையில் அனைத்து மருத்துவமனைகள் மற்றும் குடிநீர் இணைப்புகளுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்க வேண்டும் என அமைச்சர் உத்தரவிட்டார்.

சம்பந்தப்பட்ட அனைத்து மேற்பார்வைப் பொறியாளர்களும் தமது அலுவலகங்களில் இதற்கென தனியாக குழு அமைத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், சேதாரங்கள் குறித்தும் ஆய்வு செய்து உடனடியாக அனைவருக்கும் தகவல் தெரிவிக்க வேண்டும் என வும் அமைச்சர் உத்தரவிட்டார்.

மழைக்காலங்களில் பொதுமக்கள் மின்சாதனங்களை எச்சரிக்கையுடன் கையாளுமாறும், அறுந்து கிடக்கும் மின் கம்பிகளின் அருகில் செல்ல வேண்டாம் எனவும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

தமிழகத்தின் வரும் நாட்களில் எதிர்பார்க்கப்படும் கனமழை எதிர்கொள்வதற்காக கீழ்க்கண்ட தளவாட பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தயார் நிலையில் உள்ளன:

1. கையிருப்பில் உள்ள மின் கம்பங்கள் : 3,00,483 எண்ணம்,

2. கையிருப்பில் உள்ள மின் கம்பிகள்: 22,209 கி.மீ.,

3. கையிருப்பில் உள்ள மின்மாற்றிகள்: 18,395 எண்ணம்,

4. தயார் நிலையில் இருக்கும் நீர் இறைக்கும் பம்புகள்: 90 எண்ணம்,

5. தயார் நிலையில் இருக்கும் டீசல் ஜெனரேட்டர்கள்: 396 எண்ணம்,

6. அவசரகால மின் விளக்குகள்: 3,586 எண்ணம்,

7. தயார் நிலையில் உள்ள லாரி/கிரேன் லாரிகள்: 223 எண்ணம்,

8. எரிவாயு வெட்டும் இயந்திரம்: 16 எண்ணம்,

9. வெல்டிங் இயந்திரம்: 21 எண்ணம்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் ராஜேஷ் லக்கானி, மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்புக் கழகம்) இரா. மணிவண்ணன், தொடர்புடைய தலைமைப் பொறியாளர்கள், மேற்பார்வைப் பொறியாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

விழுப்புரத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா!

விழுப்புரம், ஜூலை 5 - கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாற்றுத் திறனாளிகளுக்கு, மாணவர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் "உதயநிதி ஸ்டாலின்" ரசிகர் மன்ற நிர்வாகிகளுக்கு விருதுகள் வழங்கும் விழா மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. தலைமையில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினரும், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளருமான டாக்டர் பொன். கௌதம சிகாமணி விருதுகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

ரசிகர் மன்ற மாவட்டத் தலைவர் பிரேம் வரவேற்பு உரையாற்றினார். சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்டச் செயலாளர் சங்கர், ரசிகர் மன்ற நிர்வாகிகள், ரசிகர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ்!

ம.ரா.வின் பாராட்டும் கருத்துரையும்!

முரசொலி கலைஞர் சிறப்பிதழ் பார்த்தேன்.

மாதம்தோறும் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் சாதனைகளும் அவருடைய சிந்தனைகளும் அணி வகுப்பாக வந்துகொண்டிருக்கின்றன. வடிவமைப்பும் சிறப்பாக உள்ளது. ஒவ்வொரு துறை சார்ந்தும் கலைஞர் கொண்டாடப் படுவதற்கான காரணங்களை அத்துறை சார்ந்தவர்களே கூற மற்றவர்கள் அறிய நல்வாய்ப்பினைத் தருகிறது சிறப்பிதழ். நன்றி கலந்த பாராட்டுகள்.

இன்று (ஜூலை 3) வந்த சிறப்பிதழில் இடம்பெற்றிருக்கும் படங்கள் ஒவ்வொன்றும் கலைஞர் அவர்களைப் பற்றிய நினைவுகளைக் கிளறி விடுகின்றன.

முனைவர்
ம.இராசேந்திரன்
மேனாள் துணைவேந்தர்
தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம்

மத்திய கூட்டுறவு வங்கிகளில் - முன்னோடியாகத் திகழும்

தமிழ்நாடு சாதனை படைத்து அசத்தி வருகிறது!

சென்னை, ஜூலை 5 - கூட்டுறவே நாட்டுயர்வு என்ற வாசகத்துக்கு ஏற்ப கூட்டுறவு வங்கி 100 ஆண்டுகால வரலாறு உடையது.

கூட்டுறவு வங்கிகள் இந்திய நிதி முறையில் பங்குவகிக்கின்றது. அதன் பணிகளை செவ்வனே செய்தல், எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்தல், நிறைய அலுவலகங்கள் மூலம் பணிகளை செய்வது போன்றவை இதில் அடங்கும். கூட்டுறவு வங்கிகளின் பணி கிராமப்புற நிதித் தேவைகளில் இன்றளவும் முக்கிய பங்கு வகிக்கின்றது. சமீபகாலமாக நகர்ப்புற பகுதிகளில் தொடக்ககூட்டுறவு வங்கிகளின் எண்ணிக்கை அதிகரிப்பால்தொழில் துறையும் அதிகரித்துக்கொண்டு வருகிறது.

இந்தியாவில் கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் கூட்டுறவு சங்க விதியின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. ரிசர்வ் வங்கி, கூட்டுறவு வங்கிகளை ஒழுங்கு முறை செய்யும் கூட்டுறவு கடன் அமைப்புதான் மாநிலத்தில் தனிப்பெரிய நிறுவனக் கடன் வழங்கும் முறையாக விளங்குகிறது. கிராமப்புற மக்களுக்கு கூட்டுறவு வங்கிகள் குறைந்த வட்டி விகிதங்களில் கடன் வழங்குகிறது. இதன் மூலம் விவசாயிகள் முறையற்ற கடன். அதிக வட்டிக்கு வாங்குவது மிகவும் குறைக்கப்படும். சமூக ரீதியாகவும், புவியியல் ரீதியாகவும் இந்த நிறுவன முறை விவசாயிகள் கடன் பெறுவதற்கு ஏற்றதாக இருக்கின்றது.

சிறு தவணை மற்றும் நடுத்தர தவணைக் கடன் அமைப்புகளில் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி மாநில அளவிலும், மத்திய கூட்டுறவு வங்கி மாவட்ட அளவிலும் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி கிராமம் அளவிலும் தலைமை வங்கியாக விளங் குகின்றது. தமிழ்நாட்டில் 3 அடுக்கு அமைப்பாக தமிழ் நாடு மாநில தலைமை வங்கி மாநில அளவில் 45 கிளைகளுடனும், 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, மாவட்ட அளவில் 77 கிளைகளுடனும், 4,474 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகிராமப்புற அளவிலும் செயல்படுகிறது. மத்திய கூட்டுறவு வங்கிகள் மாவட்ட தலைமையிடம் அல்வது மாவட்டத்தில் உள்ள முக்கிய நகரங்களில் இருக்கும் இந்த வங்கிகளுக்கு சில தனிநபர்கள்.

நிதி மற்றும் நிர்வாகம் இரண்டையும் வழங்குவர். மத்திய கூட்டுறவு வங்கிகள் 3 நிதி ஆதாரங்களை பெற்றுள்ளது அவர்களது சொந்த முதலீட்டு பங்குகள் மற்றும் இருப்புகள், பொது மக்களிடம் இருந்து பெற்றுள்ள வைப்பு நிதி, மாநில கூட்டுறவு வங்கிகளிடம் இருந்து பெற்றுள்ள கடன்கள்.

மாநிலத்தில் 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் உள்ளது. இவை அனைத்தும் கிராமப்புற பகுதிகளில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் கிராமப்புற பொது மக்களுக்கு சேவை செய்வதற்காக அமைந்து இருக்கிறது. இவை பால் பண்ணை, கைத்தறி, சர்க்கரை மற்றும் இதன் சார்ந்த இதரகூட்டுறவுகள் ஆகியவற்றின் கடன் தேவைகளை பூர்த்தி செய்கின்றது. இவை மட்டுமின்றி வேளாண் சாராத தேவை மக்களுக்கு, பொது 5 நேரடியாக இந்த வங்கி கிளையின் சேவை பகுதிக்குள் இருப்பின் அவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

தி.மு.க. ஆட்சி பொறுப்பு ஏற்ற பிறகு கூட்டுறவு சங்கங்களின் தற்போதைய செயல்பாடுகள், புதிதாக கொண்டுவர உள்ள திட்டங்கள், விவசாயிகள் நுகர்வோர்கள் பயனடையும் வகையிலும், கூட்டுறவு சங்கத்தை பலப்படுத்தி அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் வகையிலும் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது அத்த வகையில், இது வரை இல்லாத அளவில் அதிகபட்ச எண்ணிக்கையில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு அவர்களுக்கும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன அதன் ஒருபகுதியாக கூட்டுறவுத்துறையில் மின்னணு பண பரிமாற்றம் மேற்கொள்ள கடந்த சில மாதங்களாக பல்வேறு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வத்தன.

அதன்படி கூட்டுற வுத் துறையில் உள்ள 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிலும், அதன் 922 கிளைகளிலும் ஐ.எம்.பி.எஸ். வசதி மார்ச் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது.

தொடர்ந்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் யு.பி.ஐ. வசதி அறிமுகப்படுத் தப்பட்டு உள்ளது. இதன் மூலம் இந்தியாவிலேயே முதல்முறையாக கூட்டுறவு துறையில் யு.பி.ஐ. வசதி பெற்ற மாநிலமாக தமிழகம் முதலிடத்தில் உள்ளது. இது கூட்டுறவு துறையின் மைல் கல்லாக உள்ளது. இதற்கு மேலும் மகுடம் சூட்டும் வகையில் அகில இந்திய அளவில் தமிழ்நாட்டில் உள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் லாபம் ஈட்டி அசத்தி வருகின்றது. அதன்படி 2020 - 2022ம் ஆண்டில் அகில இந்திய அளவில் தமிழ்நாட்டில் உள்ள 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும் லாபத்தில் இயங்குகின்றன தமிழ்நாட்டில் எந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும் குவிப்பு நட்டம் தொடர் நஷ்டம்) எதுவுமில்லை. அகில இந்திய அளவில் ஒரு வங்கியின் சராசரி வியாபாரம் ரூ.72, 134 கோடியாகும். இதில் தமிழ்நாட்டில் 2021 -2022ம் ஆண்டில் 83.329 கோடியாகவும், 2022-2023ம் ஆண்டில் 1.3.667 கோடியாகவும் உள்ளது. அதேபோல் அகில இந்திய அளவில் ஒரு வங்கியின் சராசரி லாபம் 84 கோடியாகும். ஆனால் தமிழ்நாட்டில் இது 2021 22ல் (13 கோடியாகவும், 2022-2023ல் ரூ.824 கோடியாகவும் உள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் ஒரு வங்கியின் சராசரி கடன் நிலுவை அகில இந்திய அளவில் ரூ.1959 கோடியாகவும், இது தமிழ் நாட்டில் 2021 - 22ல் ரூ.31774 கோடியாகவும். 2022-2023ல் ரூ.71,946 கோடியாகவும் உள்ளது ஒட்டுமொத்தமாக மத்திய கூட்டுறவு வங்கி இந்திய அளவில் சாதனை படைத்து அசத்தி வருகிறது. இன்னும் சில ஆண்டுகளில் கூட்டுறவுத்துறை மேலும் பல்வேறு சாதனைகளை படைக்கும். என்று கூட்டுறவுத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகர் பகுதி லெக்கையன்கோட்டை பிரிவு முதல் குழந்தை வேலப்பர் கோவில் வரை நெடுஞ்சாலையில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட மின் விளக்குகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி நேற்று முன்தினம் (03.07.2023) இயக்கி வைத்தார். அருகில் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, ஒட்டன்சத்திரம் நகராட்சித் தலைவர் திருமலைச்சாமி, துணைத்தலைவர் வெள்ளைச்சாமி, ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாளர் சக்திவேல் உட்பட பலர் உள்ளனர்.